**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்-இலவசக் கருவிகள் வழங்குதல்-2000-2001 ஆம் ஆண்டில் கூடுதலாக 4000 துணி தேய்ப்புப் பெட்டிகள் வழங்குதல்-ஆணைகள்-வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை(நிலை) எண்: 56
நாள்: 1.6.2000

ஆணை:

சலவைத் தொழிலாளர்கள் அவர்களது பூர்வீக தொழிலை செய்வதற்கு ஏதுவாக ஆண்டுதோறும் இலவசமாக 4000 பித்தளை துணி தேய்ப்புப் பெட்டிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன:-

சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பயனாளி மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

பயனாளியோ அல்லது அவரது குடும்பத்தினரோ கடந்த பத்து ஆண்டுகளில் இலவச துணித்தேய்ப்பு பெட்டி பெற்றிருக்க கூடாது.

பயனாளி 21 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2. 1999-2000 ஆண்டில் இலவச துணி தேய்ப்புப் பெட்டிகள் வேண்டி பெறப்பட்டு நிலுவையிலுள்ள மனுக்களின் எண்ணிக்கையும்,2000-2001 ஆம் ஆண்டில் பெறக்கூடிய மனுக்களின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு பிற்பட்டோர் நல அமைச்சர் 11.5.2000 அன்று மானியக் கோரிக்கை எண்.31 தொடர்பான விவாதத்தின் போது, 2000-2001 ஆண்டில் வழக்கமாக வழங்கப்படும் 4000 துணிதேய்ப்புப் பெட்டிகளுடன் கூடுதலாக 4000 துணி தேய்ப்புப் பெட்டிகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

3. அதன்படி 2000-2001 ஆண்டில் வழக்கமாக வழங்கப்படும் 4000 துணிதேய்ப்புப் பெட்டிகளுடன் கூடுதலாக 4000 துணி தேய்ப்புப் பெட்டிகள், ரூ.49.24 இலட்சம் (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்) செலவில் வாங்கி வழங்கிட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநருக்கு அரசு அனுமதியளிக்கிறது.

4. மேலே பத்தி மூன்றில் கண்டுள்ள செலவினம் ''புதிய சேவைப் பணியாக'' (New Instrument of Service) உள்ளபடியால் சட்டப்பேரவையின் ஒப்புதல் தனியே பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறுவதை எதிர் நோக்கி சில்லரைச் செலவின நிதியிலிருந்து முன் பணமாக பெறுவதற்கு நிதித்துறையின் ஆணைகள் பெறப்பட்டு முதலில் செலவு செய்யப்படும். இதற்கென மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் நிதி (வரவு-செலவு) துறைக்கு குறிப்பிட்ட படிவத்தில் இவ்வாணையின் நகல் ஒன்றுடன் விண்ணப்பிக்கும்படி கோரப்படுகிறார்.

5. மேலே பத்தி மூன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படும்:-

"2225 ஆதிதிராவிடர்,பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-102 பொருளாதார முன்னேற்றம்- மி திட்டத்தில் சேராதது- கியி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசமாக கைக் கருவிகள் வழங்குதல்-20 கருவிகளும் தளவாடங்களும் (தகவல் தொகுப்பு குறியீடு 2225-03-102- கியி -2006)"

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண். 1564 FS/ P/ 2000 நாள் 25.5.2000-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலாளர்

பெறுநர்:

இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,சென்னை-5
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு),சென்னை-5
மாநிலக் கணக்குத் தலைவர்,சென்னை-18
மாநிலக் கணக்குத் தலைவர்,சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6

நகல்:

நிதி(சந)துறை,சென்னை-9
நிதி(வரவு-செலவு 1 )துறை,சென்னை-9.
பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/